2. தகவல் கோரல்

(அ) விசாரணை ஆணையத்தின்முன் உள்ள தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்ட நிகழ்வுகள், கூடுதல் தகவல் குறித்து அவையில் எழுப்ப முற்படுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் இந்தப் பிரச்சினை குறித்துப் பேசுவதை, அவையில் raise செய்வதை நான் தடுக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஏற்கெனவே அதுகுறித்து இந்த அவையிலே நிறைய நாம் விவாதித்து இருக்கிறோம். (குறுக்கீடு)*

திரு. மு.க. ஸ்டாலின்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, இல்லை. இதுகுறித்து நாம் நிறைய விவாதித்து விட்டோம். விவாதித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நிறைய பதில் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு)*

திரு. மு.க. ஸ்டாலின்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே இதுகுறித்து நீங்கள் நிறைய விவரங்களைப் பேசி, இந்த அவையில் உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்டு, முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இப்போது மேற்கொண்டும் அதுகுறித்துப் பேசி, விசாரணை ஆணையத்தின் விசாரணைக்குக் குந்தகம் விளைவிக்கிற நிலையை நாம் உருவாக்க வேண்டாம் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *இல்லை,* **

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, நீங்கள், ஏதாவது விவரங்களைத் தெரிவிக்க வேண்டுமென்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எழுதி கொடுங்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: இல்லை, இல்லை, அதற்கு சட்டமன்றத்திற்கு வர வேண்டிய அவசியமே இல்லையே. (குறுக்கீடு) மன்னிக்க வேண்டும். மன்னிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் நேரில் சென்று எழுதிக் கொடுக்கலாம் என்றால், அதற்கு நான் சட்டமன்றத்திற்கு வரவேண்டிய அவசியமே இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, தயவுகூர்ந்து, இது முக்கியமான பிரச்சினை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள், இருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்கார்ந்துகொண்டு இப்படிப் பேசாதீர்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரிடம் பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் இப்படிச் செய்தால் எப்படி? நான் உங்களைக் கேட்பது, ஏற்கெனவே அதுகுறித்து இந்த அவையில் நான் அனுமதித்து, நீங்கள் நிறைய விவாதங்களைச் செய்திருக்கிறீர்கள். நிறைய பேசி பதிவு செய்துள்ளீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் நிறைய பதில் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து அந்த விஷயத்திற்கே நாம் போகவேண்டாம். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. விசாரணை ஆணையத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் பேசுவதற்கு முழு வாய்ப்புத் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அதில் எந்த மாற்றமும் இல்லை. ஏற்கெனவே, இதையெல்லாம் பேசியாகிவிட்டது. விசாரணை ஆணையத்தில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. அதற்கு பாதிப்பு வரும் வகையில் சூழ்நிலை வரக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, அப்படி ஏதாவது நீங்கள் பேசினால், வேறு வழியில்லை; நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டியிருக்கும். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை இதுகுறித்துப் பதில் சொல்லுங்கள் என்று வற்புறுத்த முடியாது. ஏற்கெனவே, விசாரணை ஆணையம் அமைத்திருப்பதாக அவர் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) ஆகவே, நீங்கள் விசாரணை ஆணையத்தில்கூட யாரையாவது அனுப்பி அதை தெரிவிக்கலாம். (குறுக்கீடு) இல்லை, இல்லை, எதிர்க்கட்சித் தலைவருக்கு எல்லா அதிகாரங்களும், எல்லா வாய்ப்புகளும்

இருக்கின்றன. ஜனநாயகத்தின்படி நீங்கள் நிறைய பேசுவதற்கு நான் வாய்ப்புகள் தருகிறேன். நீங்கள் வேறு எந்த issue வேண்டுமானாலும் raise செய்யுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஒரு விசாரணை கமிஷன் நிறுவப்பட்டு, அதனுடைய விசாரணை பாதிக்கின்ற வகையில் எந்தக் கருத்துகள் வந்தாலும், செவி வழியாக வந்தாலும், Cell phone-ல் வந்தாலும், WhatsApp மூலமாக வந்தாலும், செய்தித் தாளில் வந்தாலும், விசாரணைக்கு உள்ளிருக்கும் பொருள் குறித்து சட்டமன்றத்தில் எடுத்துக் கூறுவது சரியாகாது. விசாரணைக் கமிஷன் நேரடியாக அந்த இடத்திற்கே சென்று விசாரித்துக்கொண்டிருக்கிறது. அதற்கு ஊறு விளைவிக்கின்ற வகையில் எந்தக் கருத்து வந்தாலும், அந்த விசாரணை பாதிக்கப்படக்கூடிய சூழல் இருக்கிறது. ஆகவே, தயவுகூர்ந்து, யாரும்—ஏற்கெனவே இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். அதற்கு மிக விரிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதோடு இந்தப் பிரச்சினையை முடித்துக்கொண்டு— இதற்கு மேலாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் நீண்ட விளக்கத்தை இப்போது தந்துகொண்டிருக்கிறீர்கள். அதையெல்லாம் மீறி, மீறி, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பிடிவாதமாக இதில் கருத்துகள் தெரிவிப்பது என்பது, சரியான நடைமுறையாக, மரபாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை, (குறுக்கீடுகள்) இருங்கள், இருங்கள். இப்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு சில விஷயங்களை சொல்லலாம் என்று நீங்கள் சொல்கிறீர்கள். நீங்கள் தகவல் சொல்வதில் எனக்கு மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால் அதற்கு அவர் பதில் சொல்லக்கூடிய சூழ்நிலையில் இருக்க வேண்டும். இப்பொருள் விசாரணை ஆணையத்தில் இருப்பதனால், மேற்கொண்டு அதில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது வேறு யாரோ பதில் சொல்ல முடியாது. நீங்கள் மிகவும் வற்புறுத்துகின்ற

காரணத்தினால் உங்களைப் பேசுவதற்கு அனுமதிக்கிறேன். அது விசாரணை ஆணையத்தின் விசாரணைக்கு எதிராகப் போகுமா என்பதை நான் ஆலோசித்து, அவைக் குறிப்பிலே அதை வைத்திருப்பதா, வேண்டாமா, என்பதற்குரிய நடவடிக்கையை உறுதியாக எடுப்பேன் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் என்னவென்று சொல்லுங்கள்.

முற்பகல் 11-25

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் பேசியது முழுவதும், விசாரணை ஆணையத்தின் விசாரணையில் உள்ள பொருள் குறித்து வருகிறது.* (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *என்னுடைய உரையை நான் இன்னும் முடிக்கவில்லை. முடித்துவிடுகிறேன். முடித்த பிறகு சொல்லுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதுகுறித்த விவரங்களை நீங்கள் விசாரணை ஆணையத்திடம்தான் தெரிவிக்க வேண்டும். விசாரணை ஆணையத்தில் இருக்கும் ஒரு பொருள் குறித்து விரிவாக இங்கு பேசிய காரணத்தினால், நீங்கள் இதுகுறித்து முதலில் பேசியதிலிருந்து இதுவரை பேசிய அனைத்துக் கருத்துகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். மேலும், இதுகுறித்து விசாரணை ஆணையத்தில் நீங்கள் முறையிட்டுக்கொள்ளலாம் என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். இதுகுறித்து, மேற்கொண்டு அவையில் விவாதிக்க அனுமதிக்க முடியாது என்பதையும் நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். வேறு ஏதாவது பொருள் குறித்து விவாதிக்க வேண்டுமென்றால், நீங்கள் automatic ஆக raise செய்யுங்கள், நான் அனுமதி தருகிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசிய அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.* (குறுக்கீடுகள்) *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், சொல்லுங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* ** *நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2018 ஜூன் 7]

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியதில் வெளிநடப்பு என்ற வார்த்தை மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும். மற்ற எல்லாவற்றையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்டெர்லைட் பிரச்சினை சம்பந்தமாக நடைபெற்ற நிகழ்வுகள் குறித்து, முழு விசாரணை மேற்கொள்வதற்காக ஓய்வு பெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி அவர்கள் தலைமையில் விசாரணை ஆணையம் தொடங்கப்பட்டு, தற்போது விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல; இந்தப் பிரச்சினை குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கும் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு சம்பவத்தைப் பற்றியோ, ஒரு பொருளைப் பற்றியோ அவையில் விவாதிப்பது மரபல்ல. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அப்போது அமைச்சராக இருந்து, தற்போது சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவராக இருக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மரியாதைக்குரிய அண்ணன் திரு. துரைமுருகன் அவர்கள், 'நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஒரு பொருளைப் பற்றி அவையில் பேசுவது மரபல்ல' என்ற ஒரு கருத்தை ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறார். அதன் அடிப்படையிலே இது தொடர்பான எந்த ஒரு நிகழ்வாக இருந்தாலும், எந்த ஒரு பிரச்சினையாக இருந்தாலும், விசாரணை ஆணையத்தில் தெரிவிக்கலாம் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 92 (1)-ல், நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின்மீதும், தம் கருத்தைச் சொல்லவோ, அப்பொருள் பற்றிக் குறிப்பிடவோ கூடாது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் அதைத்தான் நான் இன்றைக்கு வற்புறுத்திச் சொன்னேன். அவர் மீண்டும் அதுகுறித்து கருத்து தெரிவிக்க வேண்டுமென்று வற்புறுத்தினார். சாதாரணமாக இருந்தால் நான் அதை அவைக்குறிப்பில் அனுமதிக்கலாம் என்றுதான் பேச

அனுமதித்தேன். ஆனால், அவர் பேச ஆரம்பித்ததிலே இருந்து, முழுக்க முழுக்க விசாரணை ஆணையத்தின்முன் உள்ள பொருள் குறித்தே அவருடைய கருத்துகள் வருகின்ற காரணத்தினால், அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு, விசாரணை ஆணையத்தில் இருக்கின்ற எந்தப் பொருள் குறித்தும், இந்த அவையில் கருத்துகள் தெரிவிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நிகழ்வின் மூலமாக நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 11-30

(ஆ) கோவை மத்திய சிறையில் கைதிகள் தாக்கிக் கொண்டதில் ரமேஷ் என்பவர் உயிரிழந்தது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை சிறையில் இரண்டு கைதிகள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதில், ரமேஷ் என்ற கைதி இறந்திருக்கிறார். அவர் ஒரு விசாரணைக் கைதி. சிறைச்சாலை என்பது அங்கே இருக்கக்கூடியவர்களின் மனதை சீர்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய இடம். சிறைச்சாலை கொலைக் களமாக மாறக் கூடாது. சிறைச்சாலைகளைக் கண்காணிப்பவர்கள் போதுமான நடவடிக்கைகளை எடுக்காததால், இதுபோன்ற குற்றங்கள் நடைபெறுகின்றன. அரசியல்வாதிகளாகிய நாமும் சிறைச்சாலைகளுக்கு அடிக்கடி செல்ல வேண்டிய நிலை வருகிறது. பல போராட்டங்கள்; விவசாயிகளுக்கான பல போராட்டங்கள் போன்று மக்களுடைய பிரச்சினைகளுக்காகப் போராடினால்கூட இந்த அரசு எங்களைக் கைது செய்துவிடும். நாங்கள் உள்ளே போகக்கூடிய நிலைமை வரும். அதுவும் எங்களுக்குத் தெரியும். நீங்கள் வேறுவிதமாக எதையும் நினைத்துவிடாதீர்கள். அதுபோன்று நாங்கள் செயல்பட மாட்டோம். நிச்சயமாகச் சொல்கிறேன்; எந்தவிதத் தவறும் செய்துவிட்டு நாங்கள் சிறைச்சாலைகளுக்குச் செல்ல மாட்டோம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்களே, நீங்கள் என்ன விஷயத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமோ, அதைப்பற்றிக் கேளுங்கள்.*